**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ATTUR.**

**Sessions Case No.260/2023**

**Prosecution witness 5**

| | |
|---|---|
| **Name** | **: கார்த்திக்** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**(Accused 1 and 2 present. Counsel present. )**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 28.10.2024.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:-</u>

1) நான் தற்போது தென்குமரை கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 2019-2022 வரை மூம்முடி மற்றும் தியாகனூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். 06.08.2021 மதியம் 3.00 மணியளவில் மதுவிலக்கு காவல் துறை ஆய்வாளர் போன் செய்து 120 லிட்டர் சாராயத்தை நீதிமன்ற உத்தரவுப்படி அழிக்கவேண்டும் என்றும் அதற்காக சாட்சியாக இருக்கும் படி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் அருகில் இருந்த ஆதிதிராவிடர் மகளிர் விடுதி பின்புறம் 3.30 மணியளவில் மதுவிலக்கு காவல் துறை ஆய்வாளர் சாராயத்தை அழித்தார்.

2) என்னுடன் கிராம உதவியாளர் ஆர்.மாதேஸ்வரி உடன் இருந்தார். இது சம்பந்தமாக அழித்தல் மகஜரில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். மேற்படி அழித்தல் மகஜர் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அழித்தல் மகஜரில் குறியீடு செய்வதற்கு நகல் தரப்படவில்லை என்று எதிரி வழக்கறிஞர் ஆட்சேபணை எழுப்பட்டது. ஆட்சேபணை உடன் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

**3)** நான் சுமார் 10 வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் 3 வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன். மேற்படி 120 லிட்டர் சாராயம் எத்தனை பாத்திரங்களில்(லாரி டியூப், பேரல் மற்றும் பாட்டில்) இருந்தது என்று ஞாபகம் இல்லை. அழித்தல் மகஜரை யார் எழுதினார்கள் என்றால் ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்தில் தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் போலீஸார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Assistant Session Judge,**
**Attur.**